**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.224/2022**

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திருமதி.P.சர்மிளா, பி.பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தேவராஜ் | வட்டம் | : | சத்தியமங்கலம் |
| த/பெ. | : | நம்பியான் | மாவட்டம் | : | ஈரோடு |
| க/பெ. | : | - | தொழில் | : | |
| கிராமம் | : | சின்னசாலட்டி, கல்கடம்பூர் | வயது | : | 37 |

**வா.சா.1 : முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 28.03.2022 தேதிய வாதி பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்று நகல் **வா.சா.ஆ.1** ஆகவும், 23.09.2021 தேதிய பட்டா (பட்டா எண்.3773) கணினிவழி நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், 23.09.2021 தேதிய பட்டா எண்.3773க்குரிய அ பதிவேடு (எண்ணிக்கை - 2) கணினிவழி நகல் **வா.சா.ஆ.3** ஆகவும், 27.04.2022 தேதிய பட்டா மாறுதல் உத்தரவின் கணினிவழி நகல் **வா.சா.ஆ.4** ஆகவும், 20.10.2022 தேதிய க.ச.எண்.1702க்குரிய பட்டாவின் கணினிவழி நகல் **வா.சா.ஆ.5** ஆகவும், 20.10.2022 தேதிய க.ச.எண்.1702க்குரிய அ பதிவேட்டின் கணினிவழி நகல் **வா.சா.ஆ.6** ஆகவும், 20.10.2022 தேதிய க.ச.எண்.1704க்குரிய பட்டாவின் கணினிவழி நகல் **வா.சா.ஆ.7** ஆகவும், 20.10.2022 தேதிய க.ச.எண்.1704க்குரிய அ பதிவேட்டின் கணினிவழி நகல் **வா.சா.ஆ.8** ஆகவும், 18.02.2021 தேதிய கந்தய ரசீதின் அசல் **வா.சா.ஆ.9** ஆகவும், 07.02.2022 தேதிய கந்தய ரசீதின் அசல் **வா.சா.ஆ.10** ஆகவும், 18.07.2022 தேதிய வாதி ஒரு பூச்சியப்பனுக்கு விற்பனை செய்த கிரைய பத்திரத்தின் சான்று நகல் **வா.சா.ஆ.11** ஆகவும், 18.07.2022 தேதிய வாதி ஒரு சாந்திக்கு விற்பனை செய்த கிரைய பத்திரத்தின் சான்று நகல் **வா.சா.ஆ.12** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

PUSHPARAJ SHARMILA

Digitally signed by PUSHPARAJ SHARMILA
Date: 2025.04.22 18:46:41 +0530